ALPHA MIND POWER

# NEWSLETTER



February 2018

## From Guruji's desk....



My Dear Alpha Siddha,

I hope the New Year began with good positive energy for you. I also hope your meditations are gaining strength and giving you the power to create the life that you wish.

We concluded the last year with a Homam on 31.12.2017. It was a good way to bid farewell to 2017 and welcome 2018 as well. A homam always burns away a lot of negativity and brings in positive energy. Time and again I stress the importance of living in positive energy. I wish to write about this point again today. I must write about the energy of our thoughts in particular.

“Every Thought Form Generates Energy”. I have said this many times. This is much more tangible for us as we are meditators. Meditation makes our thoughts even more powerful. Everything that we do in meditation is with our thought forms only. Be aware of the power of your thought forms and harness that power to create what you want in life.

You can be the creator of your life. You need not be a victim of circumstances. And there is only one point which you need to bear in mind to make this happen. Stop dwelling on the problem. Focus on the solution. That is the simple secret.

Although I have stressed upon this in every class in different ways, I still find many of our Siddhas stuck to the problems that they see in life. When you keep thinking of what is not right in life, believe me, you are energising it and making it bigger. Instead, shift your focus. Start thinking about how you would like this to change. The moment the shift takes place within you, your thought patterns will also change. And that will be the beginning to create the life that you want.

Destiny is there for everyone. But, free will is also there. In any given situation, you have a choice of how to respond, how to react. Take the path that makes you more powerful. Choose the path that brings you closer to the solution that you want.

Remember, even if your time is bad, if you keep your thoughts positive and powerful, you will still emerge as a winner. But even if your time is very good and your thoughts are negative, you will miss out on opportunities. Forget about what life is doing to you. Let the change begin from within you.

Recently I met an Alpha Siddha who has attended all our classes. She was repeating level 1. After the class she met me and said “Guruji, I am so glad I came to attend level 1 again today. After attending all the classes I thought I knew everything. But, today I realised that I have forgotten the basics. I was not focussing on small things that I wanted. Now, I will start again. I will make a list of goals and meditate for each and every one”

That is the message for you. Do not forget the basics. Whatever goals you have can manifest easily if you visualise them in Alpha. You can practice any meditation like our Alpha meditation, Srividya, Psychic Energy etc. At the end of the meditation, remember to focus on the goals and situations that you wish to change.

Keep your focus right. Life is yours.

Blessings,

***Srimatha***

### KAILASH YATRA WITH GURUJI!

Dates: 20.05.2018 to 26.05.2018 (7 days)

Please contact AMP office for more details and register your name immediately.

Ph: 044-23760007, 9841272146, 9841402000

Email: amp@alphamindpower.net

### குருஜியுடன் கைலாஷ் யாத்திரை!

தேதி 20.05.2018 முதல் 26.05.2018 வரை (7 நாட்கள்)

மேற்கொண்டு விபரங்களுக்கு ஆல்ஃபா அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும். உங்கள் பெயரை உடனடியாக பதிவு செய்யவும்.

போன் 044-23760007, 9841272146, 9841402000

Email: amp@alphamindpower.net

என்னருமை ஆல்ஃபா சித்தரே,

புது வருடம் உங்களுக்கு நல்ல சக்தியுடன் துவங்கி இருக்கும் என நம்புகிறேன். உங்கள் தியானங்களும் சிறப்பாக இருக்கும் என்று நம்புகிறேன். நீங்கள் விரும்புகின்ற வாழ்க்கையை உருவாக்கி தருகின்றன என்றும் நம்புகிறேன்.

சென்ற வருடத்தை 31.12.2017 அன்று ஒரு ஹோமத்துடன் முடித்தோம். 2017ம் வருடத்தை வழி அனுப்பி வைத்து 2018ம் வருடத்தை வரவேற்க அது மிகவும் நல்ல வழியாகவே இருந்தது. ஹோமம் செய்யும் பொழுது தீய சக்திகள் கரைந்து நல்ல சக்தி அதிகரிப்பதை உணர முடிகின்றது. நல்ல சக்தியுடனேயே வாழ வேண்டும் என்பதை நான் பல முறை கூறி இருக்கிறேன். இதை பற்றி இன்று மீண்டும் எழுத விரும்புகிறேன். குறிப்பாக எண்ணங்களின் சக்தியைப் பற்றி எழுத விரும்புகிறேன்.

**“ஒவ்வொரு எண்ணமும் ஒரு சக்தியை வெளிப்படுத்தும்”.** இதை நான் பல முறை சொல்லி இருக்கிறேன். நாம் தியானம் செய்பவர்கள் என்பதால் இதை இன்னும் அதிகமாக உணர முடியும். தியானம் நமது எண்ணங்களை மேலும் சக்தி வாய்ந்தவையாக மாற்றுகின்றது. தியானத்தில் நாம் செய்வது அனைத்துமே எண்ணங்களைக் கொண்டு தான். உங்கள் எண்ணங்களின் சக்தியை உணருங்கள். அதை உங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து நீங்கள் விரும்பும் வாழ்வை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்க்கையை உருவாக்கும் சிற்பியாக நீங்கள் இருக்கலாம். சூழ்நிலைகளின் கைதியாக நீங்கள் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இதை நிறைவேற்ற ஒரே ஒரு விஷயத்தை நீங்கள் நினைவில் கொண்டால் போதும். பிரச்சினையைப் பற்றியே சிந்திப்பதை நிறுத்துங்கள். தீர்வை நோக்கி மனதை திருப்புங்கள். அது தான் ரகசியம்.

இதை ஒவ்வொரு வகுப்பிலும் நான் பல வழிகளில் கூறினாலும் இன்னமும் பல ஆல்ஃபா சித்தர்கள் தங்களின் வாழ்வின் பிரச்சினைகளிலேயே மூழ்கி விடுவதை நான் காண்கிறேன். வாழ்வில் எது சரியில்லையோ அதைப் பற்றியே நினைக்க நினைக்க, உண்மையாக சொல்கிறேன், நீங்கள் அதை மேலும் பெரிதாக்குகிறீர்கள். அதற்கு சக்தி அளிக்கிறீர்கள். அதை தவிர்த்து உங்கள் கவனத்தை திசை திருப்புங்கள். இந்த நிலை எப்படி மாற வேண்டும் என்று யோசியுங்கள். இந்த மாற்றம் உங்களுக்குள் நிகழ்ந்த உடனேயே உங்கள் எண்ணங்களின் பாதை மாறி விடும். அது தான் நீங்கள் விரும்பும் வாழ்வை உருவாக்கும் பாதையின் துவக்கம்




***Guruji with Alpha Siddhas at Dubai Workshop***

விதி என்பது அனைவருக்கும் உண்டு. ஆனால் நமது மதியும் இருக்கிறதே. எந்த ஒரு சூழ்நிலையிலும் நீங்கள் எப்படி நடந்து கொள்கிறீர்கள் என்பதை நீங்கள் தான் முடிவு செய்கிறீர்கள். உங்களை அதிக சக்தி வாய்ந்தவராக்கும் பாதையை தேர்ந்தெடுங்கள். நீங்கள் விரும்பும் தீர்வை நோக்கி உங்களை கொண்டு செல்லும் பாதையை தேர்ந்தெடுங்கள்.

நினைவில் கொள்ளுங்கள். நேரமே சரியில்லை என்றாலும் உங்கள் எண்ணங்களை சக்தி வாய்ந்தவையாகவும் நேர்மறையாகவும் வைத்திருந்தீர்களானால் நீங்கள் நிச்சயம் வெற்றி பெறுவீர்கள். அதுவே நேரம் நன்றாக இருந்தாலும் உங்கள் எண்ணங்கள் எதிர்மறையாக இருந்தால் பல நல்ல வாய்ப்புகளை இழந்து விடுவீர்கள். வாழ்க்கை உங்களுக்கு என்ன தருகிறது என்பதை மறந்து விடுங்கள். மாற்றம் உங்களுக்குள் இருந்து துவங்கட்டும்.

சமீபத்தில் நமது எல்லா வகுப்புகளையும் முடித்த ஆல்ஃபா சித்தர் ஒருவரை சந்தித்தேன். கட்டம் 1ல் மீண்டும் கலந்து கொள்ள வந்திருந்தார். வகுப்பு முடிந்த பின்னர் அவர் என்னை சந்தித்து சொன்னார் “குருஜி, இன்று கட்டம் 1 வகுப்பில் மீண்டும் கலந்து கொண்டதைப் பற்றி மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எல்லா வகுப்புகளையும் முடித்து விட்ட பின் எல்லாம் நமக்கு தெரியும் என்று இருந்து விட்டேன். ஆனால், இன்று தான் புரிந்தது, அடிப்படையை நான் மறந்து விட்டேன் என்பது. எனக்கு தேவையான சிறு விஷயங்களைப் பற்றி நான் சிந்திக்கவே இல்லை என்பது புரிந்தது. இனி மீண்டும் துவங்குவேன். எனது இலட்சியங்களை பட்டியலிட்டு ஒவ்வொரு இலட்சியத்திற்காகவும் தியானம் செய்வேன்”.

இது தான் உங்களுக்கான செய்தி. அடிப்படையை மறந்து விடாதீர்கள். உங்கள் மனதில் இருக்கும் இலட்சியங்கள் அத்தனையும் ஆல்ஃபா தியானத்தில் பார்த்து வந்தீர்களானால் சுலபமாக நிறைவேறும். நமது தியானம் ஏதாவது ஒன்றை நீங்கள் செய்யலாம்... ஆல்ஃபா தியானம், ஸ்ரீவித்யா, சைகிக் எனர்ஜி போன்ற ஏதேனும் ஒரு தியானம் செய்யலாம். தியானம் முடித்தவுடன் உங்களுடைய இலட்சியங்கள் மற்றும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் போன்றவற்றின் மீது கவனம் செலுத்துங்கள்.

உங்கள் கவனத்தை சரியான பாதையில் செலுத்துங்கள். வாழ்க்கை உங்கள் கையில்.

ஆசீர்வாதங்கள்,

**ஸ்ரீமாதா**



***Guruji with Alpha Siddhas at Sanjeevani Workshop in Coimbatore***

**அக்ஷயா, பெங்களூரு**

நேற்று நான் மிகவும் மனம் நொந்து போயிருந்தேன். எண்ணங்கள் தொடர்ந்து எதிர்மறையாக இருந்தன. இன்று காலை வேலைக்கு செல்லும் பொழுது தீய உணர்வுகள் களைதல் தியானத்தை கேட்டேன். எனது மனம் உடனே சரியாகி விட்டது. நமது அன்றாட வாழ்வில் இப்படி சக்தி கொடுக்கும் ஆல்ஃபாவுக்கு நன்றி!

**யோகாவில் கின்னஸ் சாதனை படைத்த யோகா கலைமாமணி கவிதா பரணீதரன் எழுதும் நன்றி கடிதம்:**

குருமாவுக்கும், ஆல்ஃபா சித்தர்களுக்கும் நமஸ்காரம்.

உங்கள் பிரார்த்தனைக்காக உங்கள் அனைவருக்கும் கைகூப்பி நன்றி சொல்கிறேன். உங்கள் ஆசீர்வாதங்களுடன் 170 மணி நேரம் தொடர் யோகா பயிற்சி செய்து கின்னஸ் சாதனை படைத்திருக்கிறேன். ஏற்கனவே இருந்த சாதனையை (103 மணி) விட இது மிகவும் அதிகமாகும். முதல் மூன்று நாட்கள் என்னால் தொடர்ந்து செய்ய முடிந்தது. நான்காவது நாள் எனது சக்தி குறைந்து விட்டது. தொடர்ந்து பாலாவின் பெயரை அழைத்து வந்தேன். அன்று குருமா நேரில் வந்து எனக்கு மிகுந்த சக்தி அளித்தது உண்மையாகவே ஒரு இன்ப அதிர்ச்சியாக இருந்தது. உடனடியாக என் உடலில் அதிகமான சக்தியை உணர்ந்தேன். அதிலிருந்து எட்டாவது நாள் வரைக்கும் பாலாவின் பெயரை சொல்லிக் கொண்டே செய்தேன். திருப்திகரமாக பழைய சாதனையை முறியடித்து விட்டேன். நான் ஒரு ஆல்ஃபா சித்தராக இருந்து குருமாவின் ஆசீர்வாதங்களை பெற்றதற்கு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நன்றி குருமா. ஒரு தாய் தன் குழந்தைக்காக எப்படி கவலைப் படுவாள் என்பதை உணர வைத்து விட்டீர்கள். ஆல்ஃபாவின் உதவி இல்லாமல் என்னால் இந்த சாதனை செய்திருக்கவே முடியாது. நல்ல எண்ணங்களும் செயலும் தான் இந்த வெற்றியை எனக்கு தந்திருக்கின்றன. ஆல்ஃபாவுக்கும் குருமாவுக்கும் நன்றி!

**சந்திரா, சென்னை**

**ஆல்ஃபா மியுசிக் தெரபி** பற்றி எனது அனுபவத்தை பகிர்ந்து கொள்கிறேன். நான் எப்பொழுதும் எனது குடும்ப உறுப்பினர்களைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டே இருப்பேன். கணவர், மற்றும் மகன் பற்றி. இது எனது மனதில் தொடர்ந்து ஓடிக் கொண்டே இருந்தது. தியானம் கூட செய்ய முடியவில்லை. குருஜியை சந்தித்து மியுசிக் தெரபி பெற்றுக் கொண்டேன். 5 முறை தான் அதை கேட்டேன். இன்று என்னிடம் மாற்றம் தெளிவாக எனக்கு தெரிகிறது. என் மனம் நிம்மதியாக கவலையின்றி இருக்கிறது. இந்த மாற்றம் என்னைப் பொருத்தவரை விலை மதிப்பற்றது. நன்றி குருஜி!

**ராதா, பெங்களூரு**

**சஞ்சீவனி** வகுப்பில் கலந்து கொண்டு அந்த தியானத்தை தினமும் கேட்டு வருகிறேன். எனது உடல் நலத்தில் பல நல்ல மாற்றங்களை உணர்கிறேன். சிறு சிறு உபாதைகள் மறைந்து விட்டன. இப்பொழுது நிறைந்த சக்தியை உணர்கிறேன். குருமாவுக்கு நன்றி!

**மகேஷ், மதுரை**

நான் 5 வருடங்களுக்கு முன் ஆல்ஃபா வகுப்புகளில் கலந்து கொண்டு ஸ்ரீவித்யா தவிர எல்லா வகுப்புகளும் முடித்திருக்கிறேன். கடந்த 4 மாதங்களாக தொழில் போட்டியினால் பல விதத்தில் மனம் நொந்து இருந்தேன். பிறகு குருஜியின் பேச்சை யூடியுப்பில் கண்டேன். பிரச்சனையை பற்றியே நினைக்காமல் அதன் தீர்வை பற்றி நினைக்க வேண்டும் என்று அவர் விளக்கினார். அதை ஒரு கட்டளையாக எடுத்துக் கொண்டேன். தியானம் செய்தேன். உண்மையாக சொல்கிறேன். எனக்கு தீர்வு கிடைத்து விட்டது. ஆல்ஃபாவின் உதவியுடன் பிரச்சினை தீர்ந்து விட்டது. குருஜியிடமிருந்து வந்த ஒரு வார்த்தை எனது வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றத்தையே கொடுத்து விட்டது. தயவு செய்து நீங்கள் எல்லோரும் தியானம் செய்யுங்கள்.




**Akshaya, Bengaluru**

I was quite upset yesterday and was having negative thoughts continuously. This morning I listened to Negative thoughts removal meditation while traveling to work and my mood instantly changed. Thanks to Alpha which empowers us daily.

**Msg of thanks from Guinness World Record holder for Yoga, Yoga Kalaimamani Kavitha Bharanidharan**

Namaskar Guru Ma and Alpha siddhas,

I am joining my hands and bowing in front of all of you for your prayers and blessings. With all your blessings I have successfully completed 170 hours of continuous yoga and I set a huge margin difference from last record (103 hours).

For the first 3 days I was able to manage with my energy level but after 4th day I was totally drained into level zero, in my mind I kept calling Nemili Bala. Like a miracle Guru Ma came on the 4th day and gave me an abundance blessing. In a while I had infinite energy flowing all over my body. From 4th day till final 8th day I kept chanting Bala mantra, and I completed my record with huge satisfaction.

I am so blessed and happy to be an Alpha siddha and blessed by Guru Ma. Thank you Guru Ma. You have showed how true a mother would Care for her child. Without Alpha I don’t think I would have finished this. It’s definitely positive thought and action which has given me this victory it’s all because of Alpha and Guru Ma!

**Feedback - Chandra, Chennai**

I must share my experience with Alpha Music Therapy. I was always worried about my family members. About my husband's health, son's safety etc. This was actually running in my mind all the time – I could not even meditate. I met Guruji and got Music Therapy made for me. I heard it only 5 times. Today i can really feel the difference. My mind is calm and there is no worry now. I cannot tell how precious this is for me. Thanks Guruji!

**Feedback - Radha, Bengaluru**

After attending Sanjeevani class and listening to Sanjeevani meditation daily, my health has really improved. All small health issues i had have disappeared  i feel much more energetic. Tks Guruma!

**Feedback - Magesh, Madurai**

I started Alpha 5 years back and have done all the classes except Srividya. The last 4 months i was too much troubled by problems in business because of competitor. I was very disturbed. Then I saw Guruji's talk on youtube. Guruji explained  that we must not focus on the problem but the solution. I took that as command. meditated and really I am telling you. I got the solution. Now with Alpha problem solved. Everything is peaceful. One word from Guru has changed so much for me. Pl all of you meditate regularly.

***Guruji's TV programs are telecast in these channel. Don't miss them!***

**POTHIGAI TV**

Monday to Friday: 8.15 am

***Recordings of the programs can be viewed on our website www.alphamindpower.net***

***AMP is on Facebook & WhatsApp! Connect with us to receive latest updates on upcoming events, useful articles, & share alpha experiences with fellow alpha siddhas. Not connected yet? Send us a whatsapp message on +917358595493 to get connected***

AMP பேஸ்புக் மற்றும் வாட்ஸ்அப் குரூப்கள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. இதன் மூலம் சுலபமாக நாம் தொடர்பு கொள்ளவும் முக்கியமான செய்திகளை பகிரவும் முடியும். நீங்கள் ஏதேனும் குரூப்பில் இல்லாவிட்டால், உங்கள் மொபைல் நம்பரிலிருந்து +917358595493 என்ற நம்பருக்கு ஒரு வாட்ஸ்அப் செய்தி அனுப்பினால் நீங்கள் வாட்ஸ்அப் குரூப்பில் இணைக்கப்படுவீர்கள்

**Face book link:** https://www.facebook.com/groups/alphamindpower/

## AMP Classes Schedule

| CITY | WORKSHOP | DATE | DAY | TIME | VENUE |
|---|---|---|---|---|---|
| Chennai (Tamil) | **AISHWARYAM** Level – 1 | 10/02/18 11/02/18 | Sat Sun | 9am to 5pm 9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar Road, T.Nagar, Chennai |
| Goa (English) | **SANJEEVANI** Level – 1 | 17/02/18 18/02/18 | Sat Sun | 9am to 5pm 9am to 5pm | Hotel Mandovi, D B Marg, Panaji, Goa |
| Trichy (Tamil) | **SANJEEVANI** Level – 1 | 24/02/18 25/02/18 | Sat Sun | 9am to 5pm 9am to 5pm | Hotel Breeze Residency, McDonalds Road, Trichy |
| Bangalore (English) | **AISHWARYAM** Level – 1 | 10/03/18 11/03/18 | Sat Sun | 9am to 5pm 9am to 5pm | The Fern Citadel, #41,Sheshadri Road, Anand Rao Circle, Bengaluru – 560 009 |
| Chennai (Tamil) | **Chakra Cell Glow SANJEEVANI** Level – 1 | 16/03/18 17/03/18 18/03/18 | Fri Sat Sun | 9am to 5pm 9am to 5pm 9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar Road, T.Nagar, Chennai |
| Salem (Tamil) | **SANJEEVANI** Level – 1 | 24/03/18 25/03/18 | Sat Sun | 9am to 5pm 9am to 5pm | Hotel CJ Pallazzio, 201/6, Junction Main Road, [Near NH-7] Salem – 636005 |
| Coimbatore (Tamil) | **AISHWARYAM** Level – 1 | 31/03/18 01/04/18 | Sat Sun | 9am to 5pm 9am to 5pm | Hotel Grand Regent , 708, Avinashi Road, Coimbatore |

*Printed & Published for*

ALPHA MIND POWER™
"Power of the Subconscious Mind"


*Dr. Vijayalakshmi Panthaiyan*
*ALPHA MIND POWER*
*No.4, Abusali Street, Saligramam,*
*Chennai – 600093. INDIA*
*Phone: 044-23760007*
*Mobile:9841402000, 9841696664*
*E-Mail: amp@alphamindpower.net*
*Website: www.alphamindpower.net*


*PRINTED MATERIAL*